தினமணி

## வேளாண் இடுபொருள்கள் வழங்கும் விழா

First Published : 16 Apr 2012 11:07:15 AM IST

கள்ளக்குறிச்சி, ஏப். 15: புயலில் பயிர் சேதமடைந்த விவசாயிகளுக்கு மறுபயிர் சாகுபடிக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கும் விழா, உழவர் பெருவிழா, அறிவியல் புத்தாக்க ஆய்வு விருது வழங்கும் விழா கள்ளக்குறிச்சி ஒன்றியம் மாத்தூர் கிராமத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர்(பொறுப்பு) ஆர்.சங்கர் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு தலைவர் அ.ராஜசேகர், ஊராட்சி மன்றத் தலைவர் காமராஜ் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். உதவி வேளாண்மை அலுவலர் என்.பொன்னுராஜன் வரவேற்றார். உழவர் பெருமன்ற விழாவைத் தொடங்கி வைத்து, புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 600 பேருக்கு ரூ.8 லட்சம் மதிப்பில் வேளாண் இடுபொருட்களை வழங்கி அரசு தலைமைக் கொறடா ப.மோகன் பேசினார்.

வடக்கனந்தல் பேருராட்சித் தலைவர் வெங்கடேசன், நகரச் செயலாளர் கருப்பன், சின்னசேலம் பேருராட்சித் தலைவர் ப.ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 100 சத மானியத்தில் சொட்டு நீர் பாசனக் கருவிகள்

First Published : 16 Apr 2012 02:26:32 PM IST

ஒசூர், ஏப். 15: ஒசூரில் வெள்ளிக்கிழமை தொடங்கிய உழவர் பெருவிழாவில், தோட்டக் கலைத் துறை சார்பில் நூறு சதவித மானியத்தில் சொட்டு நீர் பாசனக் கருவிகள் வழங்கப்பட்டன.

ஒசூர் வட்டத்துக்குள்பட்ட கொலதாசபுரம், நல்லூர், சாந்தாபுரம், சின்னஎலசகிரி உள்ளிட்ட கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெற்றது. இதில், தோட்டக் கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும், இலவச சொட்டு நீர் பாசனத் திட்டத்தின்கீழ், 2 விவசாயிகளுக்கு ரூ.87,632 மதிப்பிலான சொட்டு நீர் பாசனக் கருவிகள், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 13

விவசாயிகளுக்கு ரூ.65 ஆயிரம் மதிப்பிலான வீரிய காய்கறி விதைகள், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில் 5 விவசாயிகளுக்கு ரூ.5 ஆயிரம் மதிப்பிலான கைத்தெளிப்பான் போன்றவை வழங்கப்பட்டன.

தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் சீனிவாசன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கோவிந்தராஜ், வரதராஜன், ரமேஷ், விஜயகுமார், கொலதாசபுரம் ஊராட்சித் தலைவர் சுவாதி கோவர்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**"விவசாயிகள் நலனுக்காகவே உழவர் பெருவிழா'**

First Published : 16 Apr 2012 10:19:56 AM IST

திருவாரூர், ஏப். 15: விவசாயிகளின் நலனுக்காகவே மாநிலம் முழுவதும் உழவர் பெருவிழா கொண்டாடப்படுகிறது என்றார் மாநில உணவுத் துறை அமைச்சர் ஆர். காமராஜ்.

திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் சனிக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவைத் தொடக்கி வைத்து, அமைச்சர் பேசியது:

தமிழகத்தில் வேளாண்மையில் 2-வது பசுமைப் புரட்சியை உருவாக்கவும், விவசாயத்தில் உள்ள அனைத்துத் தொழில் நுட்பங்களையும் விவசாயிகள் தெரிந்து கொள்ளவும், அவர்களுக்கு தேவையான இடுபொருள்களை ஓரிடத்தில் வழங்கவுமே இந்த உழவர் பெருவிழாவை நடத்த முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

வேளாண் துறையுடன், தோட்டக் கலை, கால்நடைத் துறை ஆகியவற்றின் உதவியுடன் இந்த விழா நடைபெறுகிறது.

விவசாயிகள் நெல்லை மட்டும் பயன்படுத்தாமல், ஊடுபயிராக பயறு வகைகளை சாகுபடி செய்து பயன்பெற வேண்டும். மேலும், மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் அனைத்தையும் விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி, பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்றார் அமைச்சர்.

முன்னதாக, 50 பயனாளிகளுக்கு ரூ. 90 லட்சம் மதிப்பில் நலத் திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

விழாவுக்குத் தலைமை வகித்த ஆட்சியர் சி. நடராசன் பேசும்போது, மல்பெரி சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விரைவில் பயிற்சிகள் அளிக்கப்படும். தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் மாவட்டத்தின் ஆறுகளில் உள்ள வெங்காயத் தாமரை, காட்டாமணக்கு செடிகள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ந. ஜீவகனி, மாவட்ட வளர்ச்சி மேலாளர் நபார்டு ந. ரவிசங்கர், மாவட்ட ஊராட்சித் தலைவர் அ. ஜெயலட்சுமி, நன்னிலம் ஒன்றியக் குழுத் தலைவர்

சம்பத், துணைத் தலைவர் குணசேகரன், வேளாண்மை துணை இயக்குநர் மயில்வாகனன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## அரூர் பகுதியில் கரும்பு சாகுபடி பரப்பு அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 17,2012,02:59 IST

அரூர்: மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளதால் அரூர் பகுதியில் கரும்பு சாகுபடிக்கு விவசாயிகள் மாறியுள்ளனர்.

அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர் ஆகிய பகுதியில் மரவள்ளி கிழங்கு, மஞ்சள், கரும்பு, நெல், ராகி, பருத்தி ஆகியவை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மரவள்ளிக்கிழங்கு வறட்சியை தாங்கி வளரும் என்பதால் தண்ணீர் வசதி இல்லத விவசாயிகள் அதிகளவில் மரவள்ளி கிழங்கை நடவு செய்தனர்.

இதில், நிலத்தை உழவு செய்தல், களை எடுத்தல், உரம் இடுதல் என ஒரு ஏக்கருக்கு, 12,000 ரூபாய்க்கு மேல் செல்வாகிறது. இந்தாண்டு, மரவள்ளிக்கிழங்கு, 70 கிலோ கொண்ட ஒரு மூட்டை 120 ரூபாய்க்கு விற்பனையானது. ஆனால், மரவள்ளிக்கிழங்கு விவசாயம் செய்த விவசாயிகள் மிகுந்த நஷ்டமடைந்தனர்.

இதே போல் மஞ்சள் நடவு செய்த விவசாயிகள் ஏக்கருக்கு களை எடுத்தல், உழவு செய்தல், உரம் இடுதல் ஆகியவற்றில், 30,000 ரூபாய் வரை செலவு செய்கின்றனர். தற்சமயம் மஞ்சள் ஒரு குவிண்டால், 3 ஆயிரத்து 500 ரூபாய் வரை மட்டுமே விற்பனை ஆகிறது. இதனால் மஞ்சள் பயிரிட்ட விவசாயிகளும் மிகுந்த நஷ்மடைந்தனர்.

மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சியால் அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர் பகுதிகளில் உள்ள விவசாயிகள் இந்தாண்டு கரும்பை அதிகளவில் நடவு செய்துள்ளனர்.

கரும்பு பயிருக்கு அதிகளவில் தண்ணீர் தேவை. இருந்தபோதும் விவசாயிகள் கரும்பு சாகுபடிக்கு மாறியுள்ளனர். கரும்புக்கு அரசு விலை நிர்ணயம் செய்துள்ளதால் தங்களுக்கு நஷ்டம் எதுவும் ஏற்படாது என்ற நம்பிக்கையில் விவசாயிகள் அதிகளவில் கரும்பு நடவு செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர் பகுதியில், 9 ஆயிரத்து 800 ஏக்கர்

பரப்பளவில் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்துள்ளனர். இந்தாண்டு 12 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் கரும்பு நடவு செய்யப்பட்டுள்ளதாக இப்பகுதியில் நடவு செய்யப்பட்டுள்ள கரும்புகள் அரூர் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கை ஆலைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு அங்கு அரவை செய்யப்படுகிறது.

இது குறித்து அரூர் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைமை அலுவலர் குணசேகரன் கூறும் போது, ""கடந்தாண்டு ஆலையில் அரவை செய்ய, 2.70 லட்சம் டன் கரும்பு மட்டும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்தாண்டு ,4.30 லட்சம் டன் கரும்பு அரவை செயய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இது ஆலையின் முழு அரவைத்திறனை எட்டியுள்ளது," என்றார்.

## மழை பொய்த்ததால் நேந்திர வாழை பாதிப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 17,2012,02:04 IST

பந்தலூர் : நீலகிரி மாவட்டம் பந்தலூர் பகுதியில் கோடை மழை பொய்த்ததால் நேந்திரன் வாழை விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.பந்தலூர் பகுதியில் தேயிலைக்கு போதிய விலை இல்லாததால், நேந்திரன் வாழை விவசாயம் நடந்து வருகிறது. கோடை மழை பொய்த்ததால்,நேந்திரன் வாழை விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், பல வாழை மரங்கள் காய்ந்து வாடிய நிலையில் காணப்படுகின்றன. வங்கியில் கடன் பெற்று விவசாயம் செய்த பலரும் இந்த பாதிப்பால் கவலையடைந்துள்ளனர். எனவே, "தோட்ட கலைத்துறையினர் இப்பகுதிகளை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்,' என பாதிக்கப்பட்டவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

## கூடுதலாக 25 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதி செய்ய கோரிக்கை

ஏப்ரல் 16,2012,23:49



- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -நடப்பாண்டில், பருத்தி கையிருப்பு போதுமான அளவிற்கு இருக்குமென்பதால், கூடுதலாக 25 லட்சம் பருத்தி பொதிகளை (ஒரு பொதி-170 கிலோ) ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டுமென மத்திய வேளாண் அமைச்சகம் கோரிக்கை விடுத்துள்ளது.

உற்பத்திநடப்பு 2011-12ம் பருத்தி பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்),கடந்த ஆண்டை விட, பருத்தி உற்பத்தி சிறப்பாக அதிகரித்துள்ளது. நடப்பு பருவத்தில் இதன் உற்பத்தி 3.50 கோடி பொதிகளாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.கூடுதலாக, 20 லட்சம் பருத்தி பொதிகள் உற்பத்தியாகும் என்பதால், அதன் விலை சரிவடைந்துள்ளது.

அரசு, ஒரு குவிண்டால் பருத்திக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை 3,300 ரூபாய் என நிர்ணயித்துள்ளது. ஆனால், வெளிச் சந்தையில் பருத்தி விலை, இதை விட குறைவாகவே உள்ளது.நடப்பு பருவத்தில் மத்திய அரசு, 1.25 கோடி பருத்தி பொதிகளை ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால், சென்ற மார்ச் நிலவரப்படி 94 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. பருவம் முடிவதற்குள், பருத்தி ஏற்றுமதி, இலக்கை விஞ்சி விடும் என்பதாலும், உள்நாட்டில் பருத்திக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்ற கணிப்பினாலும், பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. இதற்கு ஜவுளி துறை ஆதரவளித்த போதிலும், விவசாயிகள் தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளும், தடையை நீக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தன.இதையேற்று, பருத்தி ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது. ஆனால், ஏற்கனவே பதிவு செய்தவர்கள் மட்டுமே, அனுமதிக்கப்பட்ட அளவுகளில் பருத்தியை ஏற்றுமதி செய்யலாம் என, மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்தது.

இந்நிலையில், பருத்தி ஏற்றுமதிக்கு நிர்ணயிக்கப்பட்ட வரம்பை தளர்த்தி, முழுமையான ஏற்றுமதிக்கு அனுமதிக்க வேண்டும் என, மத்திய வேளாண் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.தற்போது, இந்த அனுமதி வழங்கப்பட்டால், நிர்ணயிக்கப்பட்ட ஏற்றுமதி அளவான 1.25 கோடி பருத்தி பொதிகளுடன் கூடுதலாக, 25 லட்சம் பருத்தி பொதிகள் ஏற்றுமதி செய்யப்படும் என்றும், எஞ்சிய பருத்தி பொதிகளை உள்நாட்டு தேவைக்கும், அடுத்த ஆண்டு கையிருப்பிற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொள்முதல்இந்நிலையில், மத்திய அரசு, வரும் மே மாதம் முதல் 25 லட்சம் பருத்தி பொதிகளை கொள்முதல் செய்து இருப்பில் வைக்குமாறு, பருத்தி கழகத்திடம் தெரிவித்துள்ளது.பருத்தி ஏற்றுமதி மீதான தடை முற்றிலும் நீக்கப்படுமா, இப்பிரச்னை தொடர்பாக மத்திய வேளாண் அமைச்சர் சரத்பாருக்கும், வர்த்தகம் மற்றும் ஜவுளித் துறை அமைச்சர் ஆனந்த் சர்மாவுக்கும் இடையிலான பனிப்போர் முடிவிற்கு வருமா என்பது இனிதான் தெரியவரும்.

## ரப்பர் உற்பத்தி 9 லட்சம் டன்

ஏப்ரல் 16,2012,23:49



கொச்சி: இந்தியாவின் இயற்கை ரப்பர் உற்பத்தி, சென்ற 2011-12ம் முழு நிதியாண்டில், 8 லட்சத்து 99 ஆயிரத்து 400 டன்னாக அதிகரித்துள்ளது என, ரப்பர் வாரியம் தெரிவித்துள்ளது.சென்ற மார்ச் மாதத்தில், ரப்பர் உற்பத்தி, 54 ஆயிரம் டன்னாக குறைந்துள்ளது.

இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியை விட, 0.7 சதவீதம் (54 ஆயிரத்து 400 டன்) குறைவாகும்.

மதிப்பீட்டு மாதத்தில், இதன் பயன்பாடு, 80 ஆயிரத்து 10 டன்னிலிருந்து, 84 ஆயிரத்து 500 டன்னாக அதிகரித்துள்ளது. உள்நாட்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி குறைந்ததை அடுத்து, இதன் இறக்குமதி, 5,253 டன்னிலிருந்து, 19 ஆயிரத்து 199 டன்னாக உயர்ந்துள்ளது.
ரப்பர் ஏற்றுமதி, 1,945 டன்னிலிருந்து, 7,943 டன்னாக குறைந்துள்ளது.சென்ற 2011-12ம் முழு நிதியாண்டில், ரப்பர் உற்பத்தி, 8 லட்சத்து 99 ஆயிரத்து 400 டன்னாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய நிதியாண்டில், 8 லட்சத்து 61 ஆயிரத்து 50 டன்னாக இருந்தது.

இதே நிதியாண்டுளில், ரப்பர் பயன்பாடு, 2 சதவீதம் அதிகரித்து, 9 லட்சத்து 47 ஆயிரத்து 715 டன்னிலிருந்து, 9 லட்சத்து 66 ஆயிரத்து 215 டன்னாக உயர்ந்துள்ளது. இதன் இறக்குமதி, 1 லட்சத்து 88 ஆயிரத்து 337 டன்னிலிருந்து, 2 லட்சத்து 5 ஆயிரத்து 50 டன்னாக அதிகரித்துள்ளது.

இயற்கை ரப்பர் ஏற்றுமதி, 29 ஆயிரத்து 851 டன்னிலிருந்து, 26 ஆயிரத்து 531 டன்னாக குறைந்துள்ளது.

## உரங்கள் கையிருப்பு : விவசாயத்துறை தகவல்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,21:04 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி : தேனி மாவட்டத்தில் தேவையான அளவு உரங்கள் கையிருப்பு உள்ளதாக விவசாயத்துறை தெரிவித்துள்ளது.

விவசாயத்துறை அதிகாரிகள் கூறியதாவது: மாவட்டத்தில் யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் உரங்கள் தேவையான அளவு இருப்பு உள்ளது. மேலும் தேவையான அளவு உரங்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

தனியார் கடைகளிலும், தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களிலும் தேவையான அளவு உரங்கள் உள்ளதால், விவசாயிகள் தேவைக்கு ஏற்ப கொள்முதல் செய்து கொள்ளலாம்.

தனியாரிடம் கூடுதல் விலை தர வேண்டியதில்லை. மாவட்டத்தில் மாறி வரும் பருவ நிலை காரணமாக பூச்சி நோய் தாக்குதல் அதிகரிக்கும் சூழ்நிலை நிலவுகிறது.

இந்த பூச்சி நோய் நிலவரம் குறித்து தினமும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. நோய் தாக்குதல் ஏற்பட்டால் உடனே தோட்டக்கலைக்கல்லூரி பேராசிரியர்கள் மூலம் ஆய்வு செய்து தேவையான மருந்துகளை பரிந்துரை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றனர்.

## உழவர் பெருவிழா கோலாகலம் : பயன்பெற விவசாயிக்கு அழைப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,06:55 IST

நாமக்கல்: "விவசாயிகள், உழவர் பெருவிழாவில் பங்கேற்று பயன்பெறலாம்' என, நாமக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட உழவர் பெருவிழா, கடந்த 13ம் தேதி துவங்கி ஏப்ரல் 17ம் தேதி வரை நடக்கிறது. மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வடிப்பகுதி வளர்ச்சி திட்டங்கள் மூலமாக இயற்கை வளங்களான நிலம், நீர், தாவரங்கள் பெருக்குவதற்கான வழிமுறைகள் தொடர்பான விளக்கம் அளிக்கப்பட்டு, அது தொடர்பான கையேடு மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண் திட்டம் வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, எருமப்பட்டி, மோகனூர், பரமத்தி மற்றும் கபிலர்மலை வட்டாரங்களிலும், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம், மல்லசமுத்திரம், எலச்சிபாளையம் வட்டாரங்களிலம்,

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டம், கொல்லிமலை, நாமகிரிப்பேட்டை, பள்ளிபாளையம், ராசிபுரம் ஆகிய பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

மேலும், தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம், திருச்செங்கோடு வட்டாரத்திலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் நிலசமன்படுத்துதல், சமஉயர வரப்பு அமைத்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல் போன்ற நிலவள மேம்பாட்டு பணிகளும், பண்ணைக்குட்டை அமைத்தல், கசிவுநீர் குட்டை அமைத்தல், தடுப்பணைகள் அமைத்தல், கால்நடைக் குட்டை அமைத்தல், வரத்து வாய்க்கால் சீரமைத்தல், அமிழ்வுக்குட்டை அமைத்தல் போன்ற நீர்வள மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

அதேபோல், வேளாண் காடுகள் வளர்த்தல், பழக்கன்றுகள் வளர்த்தல், தீவனப்பயிர் மேம்பாடு செய்தல், செயல்விளக்கத்திடல் அமைத்தல் போன்ற தாவர வள மேம்பாட்டு பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள, இவ்விழாவில் விவசாயிகள், மக்கள் பங்கேற்று பயன்பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வாழைத்தார் விலை "கிடுகிடு' : விவசாயிகள் மகிழ்ச்சி

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 16,2012,06:55 IST

கருத்தை பதிவு செய்ய

ப.வேலூர்: தினசரி மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்ததால், வாழைத்தார் விலை, "கிடுகிடு' என உயர்ந்தது. அதனால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ப.வேலூர் சுற்று வட்டார பகுதியான, பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, நன்செய் இடையாறு, பொய்யேரி உள்ளிட்ட காவிரிக்கரையோர பகுதிகளில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில், வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு, பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பச்சநாடன் போன்ற ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளது.

அறுவடை செய்யப்பட்ட வாழைத்தார், ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. அவ்வாறு கொண்டு வரப்பட்ட வாழைத்தார்களை, நாமக்கல், சேலம், ஈரோடு, கரூர், திருச்சி போன்ற பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், போட்டி போட்டு ஏலம் எடுத்து விற்பனைக்காக லாரிகளில் அனுப்புகின்றனர்.

வரத்து அதிகரிக்கும் போது, வாழைத்தார் விலை வீழ்ச்சி அடைவதும், குறைவாக இருக்கும் போது, விலை தாறுமாறாக உயர்வதும் வாடிக்கையாக அரங்கேறி வருகிறது. அதேபோல், இந்த வாரம் வாழைத்தார் வரத்து குறைவால், அதன் விலையும் அதிகரித்து, விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

நேற்று நடந்த ஏலமார்க்கெட்டில், கடந்த வாரம், 300 ரூபாய்க்கு ஏலம் போன பூவன் வாழைத்தார், 400 ரூபாய்க்கு ஏலம் போனது. 200 ரூபாய்க்கு விற்பனையான கற்பூரவள்ளி ஒரு தார், 250 ரூபாய்க்கு ஏலம்போனது. 200 ரூபாய்க்கு ஏலம்போன ரஸ்தாளி ஒரு தார், 260 ரூபாய்க்கு விலைபோனது.

அதேபோல், 150 ரூபாய்க்கு ஏலம்போன பச்சநாடன் ஒரு தார், 200 ரூபாய்க்கு விலைபோனது. தினமும், 1,200 முதல், 1,500 வாழைத்தார் வரை குவியும் மார்க்கெட்டில் இந்த வாரம், 400 வாழைத்தார் மட்டுமே வந்ததால், இந்த விலை உயர்வுக்கு காரணம் என, வியாபாரிகள் தெரிவித்தனர்.வாழைத்தார் விலை உயர்ந்ததால், பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

---

தினகரன்

**பன்னீர் திராட்சை அமோக விற்பனை**

பதிவு செய்த நேரம்:2012-04-16 10:31:44

தொண்டாமுத்தூர்: கோவை அருகே தீத்திபாளையம், காளம்பாளையம், மாதம்பட்டி, சென்னனூர், தொண்டாமுத்தூர் பகுதிகளில் விதையுடன் கூடிய கறுப்பு பன்னீர் திராட்சை உற்பத்தி செய்யப்படுகிறது.

மண்ணின் ஈரப்பதம், சீதோஷ்ண நிலை, திறமையான ஆட்கள் தொழிலில் ஈடுபடுவதால் ஆண்டு முழுவதும் திராட்சை சாகுபடி அமோகமாக நடந்து வருகிறது. திராட்சையில் மருத்துவ குணம் உள்ளதால் கேரளா மக்கள் விரும்பி சாப்பிடுகின்றனர். திராட்சைகளை அட்டை பெட்டிகளில் கேரளா மாநிலத்திற்கு லாரி மூலம் தினந்தோறும் அனுப்பப்படுகிறது.

சித்திரை திருநாளையொட்டி டன் கணக்கில் திராட்சைகள் விற்று தீர்ந்து உள்ளன. மாதம்பட்டியில் உள்ள திராட்சை உற்பத்தியாளர் சங்கத்தில் நேற்று திராட்சை கிலோ.ரூ.32க்கும், 5 கிலோ கொண்ட பெட்டி ரூ.170க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது வெயில் சீசன் துவங்கி உள்ளதால் திராட்சைக்கு ஜூஸ் பிரியர்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்து உள்ளது.

**மானிய விலையில் விவசாய கருவிகள்**


பதிவு செய்த நேரம்:2012-04-16 11:44:50

உடுமலை: உடுமலை அருகே உள்ள கண்ணமநாயக்கனூர் ஊராட்சி மலையாண்டிகவுண்டனூரில் நேற்று உழவர் பெருவிழா நடந்தது.

மடத்துக்குளம் எம்எல்ஏ சண்முகவேலு கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் ரூ.15லட்சம் மதிப்புள்ள உபகரணங்களை வழங்கினார். நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர்கள் செம்மணசாமி, ஈஸ்வர்சாமி, தனபாக்கியம், ஒன்றிய குழு தலைவர் ராஜலட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

***உணவு பொருள்கள் விலை உயர்ந்துள்ள நிலையில், மார்ச்சில் பணவீக்கம் 6.89 சதவீதமாக குறைந்தது***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*சென்ற மார்ச் மாதத்தில் மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும்*

பொது பணவீக்கம் 6.89 சதவீதம் குறைந்துள்ளது. இது, பிப்ரவரி மாதத்தில் 6.95 சதவீதமாகவும், 2011–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 9.68 சதவீதமாகவும் இருந்தது. ஆக, பணவீக்கம் சற்று குறைந்துள்ளது. இருப்பினும், இது பொருளியல் நிபுணர்களின் மதிப்பீட்டைக் காட்டிலும் அதிகமாகும்.

நிதி அமைச்சர்

மேலும், உணவு பொருள்கள் விலை மிகவும் உயர்ந்துள்ளது. இதனை கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அதேசமயம் எண்ணெய், இரும்பு, உலோகம் போன்ற உற்பத்தி பொருள்கள் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 4.87 சதவீதமாக குறைந்துள்ளது. இது, பிப்ரவரி மாதத்தில் 5.75 சதவீதமாகவும், 2011 மார்ச் மாதத்தில் 7.45 சதவீதமாகவும் இருந்தது.

பல மாதங்களுக்கு பிறகு தற்போது தான் இப்பணவீக்கம் இந்த அளவிற்கு குறைந்துள்ளது. பணக் கொள்கையை முடிவு செய்வதில் இப்பணவீக்கம்தான் முக்கிய அங்கம் வகிக்கிறது. எனவே, இன்று வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் பாரத ரிசர்வ் வங்கி முக்கிய முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உணவு பணவீக்கம்

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையிலான பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 14.3 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள உணவு பொருள் பணவீக்கம் பிப்ரவரி மாதத்தில் 6.07 சதவீதமாக இருந்தது. இது, மார்ச் மாதத்தில் 9.94 சதவீதமாக உள்ளது. பிப்ரவரி மாதத்தில் 1.52 சதவீதம் அதிகரித்து இருந்த காய்கறிகள் விலை, மார்ச் மாதத்தில் 30.57 சதவீதம் உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு விலை 11.60 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், பால் விலை 15.29 சதவீதம் அதிகரித்துள்ளது. அரிசி மற்றும் தானியங்கள் விலை முறையே 4.73 சதவீதம் மற்றும் 4.41 சதவீதம் உயர்ந்துள்ளது.

முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 17.71 சதவீதம் உயர்ந்துள்ளது. வெங்காயம் விலை 24.23 சதவீதம் குறைந்துள்ளது. உற்பத்தி பொருள்களில் இரும்பு விலை 17.18 சதவீதமும், சமையல் எண்ணெய் விலை 9.78 சதவீதமும் உயர்ந்துள்ளது.

எரிபொருள்

உணவு பொருள் உள்ளிட்ட முதன்மை பொருள் பணவீக்கம் 6.28 சதவீதத்திலிருந்து 9.62 சதவீதமாக அதிகரித்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 1.20 சதவீதம் சரிவடைந்துள்ளது. எரிபொருள் மற்றும் எரிசக்தி பணவீக்கம் 12.83 சதவீதத்திலிருந்து 10.41 சதவீதமாக குறைந்துள்ளது.

சென்ற ஜனவரி மாதத்திற்கான பொது பணவீக்கம் 6.55 சதவீதத்திலிருந்து 6.89 சதவீதமாக மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2010 டிசம்பரிலிருந்து பொது பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. இதனை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி 2010 மார்ச் மாதத்திலிருந்து 2011 அக்டோபர் வரையிலான 20 மாத காலத்தில் முக்கிய கடன்களுக்கான வட்டியை 13 முறை உயர்த்தியது. இதன் காரணமாக, சென்ற 2011–12–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.9 சதவீதமாக குறைந்தது. தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி வேகத்திலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. எனவே, ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டியையும், ரொக்க இருப்பு விகிதத்தையும் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கொலக்கம்பை பகுதியில்

# காய்த்து குலுங்கும் ஜாதிக்காய்

கொலக்கம்பை, ஏப்.17-

கொலக்கம்பை பகுதியில் மருத்துவ குணங்கள் நிறைந்த ஜாதிக்காய் காய்த்து குலுங்க ஆரம்பித்து உள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## சாம்பூர்

கொலக்கம்பை அருகே சாம்பூர், முள்ளி, பரளி, மூப்பர்காடு உள்ளிட்ட ஆதிவாசி கிராமங்கள் உள்ளன.இந்த கிராமத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் பலா, வாழை, பாக்கு, மஞ்சள், காப்பி, ஜாதிக்காய் உள்ளிட்டவற்றை பயிர் செய்து வருகின்றனர். இதனை விற்பனை செய்து தங்கள் குடும்பங்களை பராமரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் மருத்துவ குணம் கொண்ட ஜாதிக்காய் தற்போது சீசன் காலம் ஆகும். இதனை இந்த பகுதியில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் பயிரிட்டு விற்பனை செய்து வருகின்றனர்.

## மருத்துவ குணங்கள்

ஜாதிக்காயில் உள்ள தோல் மற்றும் அதில் உள்ள பருப்புகள் அனைத்திலுமே மருத்துவ குணங்கள் அதிகமாக உள்ள தால் இதனை அனைத்து தரப்பு மக்களும் வாங்கி சென்று வருகின்றனர். இப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள அனைத்து ஜாதிக்காய் செடிகளிலும் ஜாதிக் காய்கள் காய்த்து குலுங்குகிறது.

தற்போது அறுவடைக்கு தயாராக உள்ள இந்த ஜாதிக் காய்களை மேட்டுப்பாளையம், கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு விவசாயிகள் கொண்டு சென்று விற்பனை செய்து வருகின்றனர். சில வியபாரிகள் இந்த பகுதிகளுக்கு நேரடியாக வந்து வாங்கி சென்று வருகின்றனர்.

## ஊறுகாய்

இந்த காய்களை வாங்கி செல்லும் பெரும்பாலான மக்கள் ஊறுகாய் தயாரிக்க பயன்படுத்தி வருகின்றனர். அரசு தோட்டக்கலைப் பண்ணையிலும் இதுபோன்று ஜாதிக்காய்களை பறித்து உறுகாய் தயாரித்து வருகின் றனர். இதனை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் அதிகளவு வாங்கி செல்கின்றனர். இந்த ஆண்டு ஜாதிக்காய் மகசூல் அதிகமாக உள்ளதாலும், நல்ல விலை கிடைப்பதாலும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். மேலும் ஜாதிக்காய் விற்பனை மூலம் தங்களுக்கு இந்த ஆண்டு ஓரளவு வருமானம் கிடைத்து உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.



**கொலக்கம்பை பகுதியில் உள்ள ஒரு விவசாயியின் தோட்டத்தில் காய்த்து குலுங்கும் ஜாதிக்காய்களை படத்தில் காணலாம்.**